செ.கு. எண் :- 118 நாள் :- 26-03-12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 26.3.2012

23.3.2012 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், கீழம்பி கிராமம், காஞ்சிபுரம் – வேலூர் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த கீழம்பி கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் என்பவரின் மகன் முத்து மீது அரசு பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஆலந்தூர் வட்டம், குரோம்பேட்டை, ஜி.எஸ்.டி சாலையில் இரு சக்கர வாகனம் மீது மாநகர அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த சேலம் மாவட்டம், அழகாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. புஷ்பராஜ் என்பவரின் மகன் திரு. டேனியல் சில்வர் ஸ்டார் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விரு சாலை விபத்துக்களில் அகால மரணமடைந்த முத்து மற்றும் டேனியல் சில்வர் ஸ்டார் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான திரு. முத்து மற்றும் திரு. டேனியல் சில்வர் ஸ்டார் ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு
இயக்குநர்
செய்தி மக்கள் தொடர்புத் துறை
சென்னை